# ஜனதாதள் கட்சி நேற்று இரண்டாக பிளவுபட்டது; சந்திரசேகர் குழுவிற்கு ராஜீவ்காந்தி ஆதரவு!

(புதுடில்லி)

ஜனதா தள் கட்சியிலிருந்து பிரிந்துசென்ற குழுவின்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. சந்திரசேகர் இன்றுகாலை இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ்காந்தியைச்சந்திப்பார்என்று இந்திராகாங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

திரு. சந்திரசேகர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை இந்திராகாங்கிரஸ் வரவேற்றதுடன் பூரண ஆதரவும் தெரிவித்துள்ளது.

ஜனதா தள் கட்சி நேற்றுக் காலை இரண்டாகப்பிளவுபட்டது. தேவிலாலின் இல்லத்தில் நடைபெற்ற ஜனதாதள்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | ஐப்பசி, 20 | றூ: ஆகிர் பிறை 17 | இதழ்: 195

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 6-11-1990

## வலி. வடக்கில் மீண்டும் பொம்மர் குண்டு வீச்சு

(காங்கேசன்துறை)

வலி-வடக்கில் நேற்றைய தினம் மீண்டும் வான் தாக்குதல் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணியளவில், பலாலியில் இருந்து கீரிமலை வரையான பகுதிகளை ஹெலி ஒன்று வட்டமிட்டுச் சென்றதை அடுத்து நண்பகல் 1 மணியளவில் இரு பொம்மர்கள் வந்து குண்டுகளை வீசின.

பல தடவைகள் பொம்மர்கள் இப்பகுதியை வட்டமிட்டுக் குண்டுகளை வீசின.

(4ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு இராணுவபயிற்சி வழங்கி வடக்கே அனுப்பதிட்டம்

(கொழும்பு)

**முஸ்லிம்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கி, வடபகுதிக்கு அனுப்புவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.**

வடபகுதி முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்கி அவர்களுக்கு விசேட இராணுவப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனை இராணுவ அதிகாரி ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருதாக கொழும்பில் அந்த இராணுவ உயர் அதிகாரி 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், ''இத்திட்டத்திற்கு விரைவில் முஸ்லிம்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் ஊர்காவற்படையாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம்களுக்கு ஆயுதங்களை வழங்கி ஊர்காவற்படையாக அரசுசெயற்படுத்துவதன் மூலம் தமிழ் முஸ்லிம் சமூகத்திடையே ஓர் நிரந்தர பிளவை ஏற்படுத்த சிங்கள முஸ்லிம் தலைவர்கள் செற்றப்பட்டு வருவதாக அவதானிக்க முடிகிறது. (சி)

## வவுச்சர்கள் மாற்றமுடியாது திண்டாட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில், உள்ளூராட்சிச் சேவையில் பணிபுரிந்து ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது நான்கு மாத ஓய்வூதிய வவுச்சர்களை வங்கிகளில் மாற்றமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புகழுடல்கள் மணலாறில் தகனம்

(முல்லைத்தீவு)

மணலாறு இராணுவமுகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த 2-வது லெப்டினன் மதுவன், சங்கர், முசோலினி ஆகியோரின் பூதவுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை மோதலில் படைகளுக்கு பலத்த சேதம் 3 புலிகள் வீர மரணம்

(திருமலை)

வேப்பங்குளம், இறக்கண்டி, வில்கம் விகாரை. நிலாவெளி ஆகிய இராணுவமுகாம்களில் இருந்து வெளியே வந்த இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற கடும் மோதலில் இராணுவத்தரப்பில் பலத்தசேதம்

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் 67,000 பேர் காணமல் போயுள்ளனர்

### மனித உரிமைக்குழு தகவல்

(கொழும்பு)

தென்னிலங்கையில் 1987ம் ஆண்டிலிருந்து அறுபத்தேழாயிரம் பேர் காணமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஸ்தாதாபனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம்செய்த மனித உரிமைகள் ஸ்தாபனக்குழுஒன்று இது தொடர்பாக கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலே மேற்கண்ட விபரங்களைத் தெரிவித்தது.

அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர், வழக்கறிஞர்கள் இருவர் என நான்கு பேரை உள்ளடக்கிய இக்குழுவினர் தென்னிலங்கையில் இது தொடர்பான தமது ஆய்வுகளை அண்மையில் மேற்கொண்டனர்.

இந்தக் குழுவின் அதிகாரபூர்வமான அறிக்கை அடுத்த மாதம் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## உளவாளிக்கு மரண தண்டனை

(மட்டுநகர்)

விடுதலைப்புலிகளின் விபரங்களை வரைபடம் மூலம், இராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்தகுருமன்வெளி பகுதியைச் சேர்ந்த கமலநாதன் (வயது 30) என்பவருக்கு விடுதலைப்புலிகள் மரணதண்டனை விதித்தனர்.

களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு 200 யார் தூரத்தில் வைத்தே மேற்படி நபருக்கு நேற்றுமுன்தினம்மரண தண்டனை வழங்கப்பட்டது. (வி)

## நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழகம் நேற்று முதல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழக மருத்துவம், கலை, விஞ்ஞானம் ஆகிய பீடங்கள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகின.

நேற்று பல்கலைக்கழகம் ஆரம்பமான போது கணிசமான அளவு மாணவர்கள் வருகை தந்திருந்தார்கள்.

1989 - 90 கல்வியாண்டுக்கான அனுமதி பெற்ற புதிய

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்கள் நினைவாக இரு பனந் தோப்புகள்!

### நாயன்மார்கட்டில் உருவாக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி நாயன்மார்கட்டுப் பகுதியில் இரண்டு இடங்களில் மாவீரர் ஞாபகார்த்த பனந்தோப்புக்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெற்ற மரம் நடுகைதொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலே மாவீரர் ஞாபகார்த்த தோப்புக்களை உருவாக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வட்டவைப் பிரதிநிதிகள், சனசமுகநிலையங்கள். கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபை, விவசாய இலாகா ஆகிய நிறு

(4ம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஊடாக பயணம் செய்யும் தமிழர் மீது கடும் சோதனை

(மாங்குளம்)

வவுனியாஊடாககொழும்பு செல்பவர்களும். வடபகுதி வருபவர்களும் நீண்டகியூவில் நிறுத்தப்பட்டு பலத்த சோதனை நடைபெறுகிறது.

கொழும்பிலிருந்து வருபவர்களும், கொழும்புக்குச் செல்பவர்களும் வரிசையில் விட்டு பத்துப்பத்துநபர்களாக அழைத்து பலத்த சோதனைகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இராணுவம் தடைசெய்த பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்வோரை இராணுவம் கடுமையாகத் தாக்குவதுடன், இளைஞர்களை முகாமில் தடுத்துவைத்து விசாரணை செய்கிறார்கள். (150)

## சிங்கள இராணுவத்தின் ஷெல் தாக்குதலினால் 200 வீடுகள் சேதம்

(காங்கேசன்துறை)

மாவிட்டபுரம் மினி முகாம் தாக்குதலின்போது சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குத

(4-ம் பக்கம் பார்க்க)

# எதிரிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றுவதில்

# மாவீரனாகத் திகழ்ந்தவர் மேஜர் அன்ரனி

சிவந்த மேனியும், வசீகரப்புன்னகையும், சுருண்ட கேசமும், கம்பீரமான தோற்றமும், அமைதியான போக்கும் கொண்டவர்தான் முன்னாள் அம்பாறை மாவட்டத்தளபதி மேஜர் அன்ரனி.

கல்முனையை பிறப்பிடமாகக்கொண்டவராக இருந்த போதிலும், சுண்டிக்குழி ஈச்சமோட்டைப் பகுதியையே தன் வதிப்பிடமாகக் கொண்டிருந்தார். அன்னாரின் வீரமரணத்தை கேள்விப்பட்டதுமே, ஈச்சமோட்டைப் பகுதி மக்கள் கதறி அழுதார்கள். அந்த மாவீரனின் உயிரற்ற உடலை நாள் முழுவதும் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

### கல்லூரி மாணவன் ஸ்ரீதரன்

தமிழ் ஈழத்தின் தென் மாகாண எல்லைப்புற மாவட்டமான அம்பாறையில் சிங்கள இனவாத அரசின் ஒடுக்குமுறைகள் கல்முனையைச் சேர்ந்த கனகசூரியர் சிறீதரன் என்ற கல்லூரி மாணவனது உள்ளத்தில் ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் போராடவேண்டும் என்ற உணர்வை ஊட்டி வளர்த்தன. அன்ரனியின் வீரம் அவருக்கு தந்தைவழி முதுசமாகக் கிடைத்தது. அம்பாறையில் இனவாதிகளும் இனவிரோதிகளும் தமிழ் மக்களை இம்சைப்படுத்தும் போதெல்லாம் அவர்கள் கனகசூரியர் என்ற அன்ரனியின் தந்தையிடம் முறையிடுவதும் அவர் பாரம்பரிய ஆயுதங்களைக்கொண்டு பாதிக்கப்படும் மக்களுக்குப் பரிகாரம் காண்பதும் வழக்கமாகும்.

அன்ரனி பாடசாலைமாணவனாக இருந்த காலத்தில் அதாவது 1980களின் ஆரம்பத்தில் விடுதலை இயக்கத்தின் பிரசுரங்களை ஒட்டுதல், பிரசுரங்களை விநியோகித்தல், நண்பர்களுடன் விடுதலை பற்றிக் கலந்துரையாடல், சுவரொட்டிகள் ஒட்டுதல் முதலான பணிகளில் ஈடுபட்டான். 1983ல் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இனஒழிப்பு நடவடிக்கையானது தமிழ் மக்களது எதிர்காலம் தொடர்பாகப் பலபுதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது. ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தமையால் அன்ரனி தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டார். அந்தநாள் தொடக்கம் தலைமை மீது விசுவாசமும் இலட்சியத்தில் உறுதியும் கொண்ட அன்ரனி தான் கொண்ட கொள்கைக்காகத்தன்னையே முழுமையாக அர்ப்பணித்துப் போராடினார்.

### போர்க்களம் பலகண்டவர்

அவரது போராட்டவாழ்வு சூடும் சுவையும் நிறைந்த பல களநிகழ்வுகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு போராட்டக் களத்திலும் அவர் பல பரிமாணங்களை வெளிப்படுத்தினார். அவை அவனது திறமை, ஆளுமை, ஆற்றல் என்பனவற்றின் சான்றாகவும் சின்னமாகவும் விளங்குகின்றன.

### தம்பட்டைவெளி தாக்குதல்

1985ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பட்டை வெளி என்ற இடத்தில் இடம் பெற்ற பெரிய தாக்குதல் ஒன்றில் மேஜர் அன்ரனி முக்கிய பங்கெடுத்தார். 1987ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசின் கூலிப்பட்டாளங்கள் கூடாரமடித்து இனஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய பொத்துவில் மினிமுகாம் தகர்ப்பு போன்றவற்றில்மேஜர் அன்ரனி தனது முழுமையான திறமையை வெளிப்படுத்தினார்.

### இந்திய படைக்கு எதிராக

1987 - 1989 வரை அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்திய இராணுவத்திற்கெதிரான பல தாக்குதல்களில் பங்கெடுத்துக் கொண்ட மேஜர் அன்ரனி1989ம் ஆண்டு கடைசிக் காலத்தில் பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் தம்பிலுவில் ஆகிய இடங்களில் தேசவிரோத சக்திகளால் அமைக்கப்பட்டிருந்த இரு முகாம்களை முற்றாக நிர்மூலமாக்கியதோடு விடுதலை ஸ்தாபனத்திற்கு பெரும் தொகையான ஆயுதங்களையும் பெற்றுக் கொடுத்தார்.



இந்திய இராணுவம் கிழக்கு மாகாணத்தில் நடாத்திய ''ஒப்றேசன் மகாதியாகம், ஒப்பறேசன் ஏஞ்சில் பயர், ஒப்பரேசன் கிராந்தி ஆகிய மூன்று பெரும் இராணுவ நடவடிக்கைகளின் போது பல வயல்வெளிகளிலும், காடுகளிலும், களங்களிலும் நின்று பெரும் தாக்குதலை நடாத்தி அந்நிய இராணுவத்தை ஓட ஓட விரட்டியடித்தார்.

1990ம் ஆண்டு முற்பகுதியில் யாழ்ப்பாணம் வந்த மேஜர் அன்ரனி கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஸ்ரீலங்கா அரசுடனான யுத்தத்தில் பலாலி, கோட்டை, கட்டுவன், வசாவிளான் போன்ற பல பகுதிகளில் பெரும் தாக்குதல்களைத் தொடுத்து களத்தில் பெரும் சமர்புரிந்து பலரது பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டவர்.

யாழ்ப்பாணத்தில் பெரும் அனர்த்தங்களைப் புரிந்து வந்த சகடை விமானம் (வை-12) இவரது கண்ணில் பட்டபோது தனது கையில் வைத்திருந்த ஜி. வி. எம். துப்பாக்கியால் தனது உயிரைப்பணயம் வைத்து அதனைத் தாக்கினார். அதன் அடிப்பாகத்தில் ரவைகள் துளைத்த நிலையில் புகைகக்கிய படி அது பலாலி விமான நிலையத்தில் போய் இறங்கியது

''ஒப்பரேசன் ஜெயசக்தி' என்ற பெயரில் கடந்த மாதம் ஸ்ரீ லங்கா இனவாத அரசால் வலிகாமம் வடக்குப் பகுதியில் மேற்கொண்ட இன ஒழிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதில்பெரும் பங்கெடுத்த மேஜர் அன்ரனி வசாவிளான் தோலகட்டி பகுதியில் சிங்களச் சிப்பாய்களை அடித்து விரட்டிவிட்டு கட்டுவன் பகுதியால் வெளியேற முயன்ற இராணுவத்துடன்மோதலில் எதிர்பாராத விதமாக 19-10-90 அன்று களத்தில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

### அம்பாறை வரை புலிக்கொடி

கோட்டையில் புலிக்கொடி பறப்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த அன்ரனி அக்கொடி அம்பாறை மாவட்டம் வரை பறக்கவேண்டும்; என்று ஆசைபபட்டார் அவர் காணத்துடித்த அந்த விருப்பை நிறைவேற்றி வைப்பதே மாவீரன் அன்ரனிக்கு தமிழினம் செய்யும் ''வீர அஞ்சலியாகும்'',

'தேவா'

---

## அங்குரார்ப்பண கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம், நல்லூர். உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர்களுக்கிடையே யாழ். அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச சபைகளை அங்குரார்ப்பணம் செய்யும் கூட்டம் எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமையும், பதினொராம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டம் இருதினங்களும் யாழ். அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

---

## இலவச நிவாரணம்: மோசடிகள் அம்பலம்

(காங்கேசன்துறை)

இடம் பெயர்ந்தோர் நிவாரணத்தில் இம்முறை பங்கீட்டு அட்டை மூலமான ஒழுங்கு முறை பின்பற்றப்பட்டதால் பல மோசடிகள் அம்பலத்திற்கு வந்துள்ளன.

இடம் பெயர்ந்தோருக்கான 3ம் கட்ட இலவச நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு, பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

முன்பு கிராம சேவையாளர்கள் வழங்கும் பெர்மிட்டுகளைக் காட்டியே ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் நிவாரணப் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் இந்த 3ம் கட்ட நிவாரணத்திற்கு கிராம சேவையாளர்களின் பெர்மிட்டுடன், பங்கீட்டு அட்டைகளையும் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதனால் பங்கீட்டு அட்டைகள் உள்ளவர்களே இம்முறை நிவாரணப் பொருட்களைப் பெறக்கூடியதாக இருந்தது.

தவறான தகவல்களைக் கூறி வெவ்வேறு இடங்களிலும் இடம் பெயர்ந்தோர் நிவாரணத்தை பெற்றுவந்தவர்களின் மோசடி இம்முறை அம்பலத்திற்கு வந்ததால் அவர்கள் ஒரு இடத்தில் மட்டுமே நிவாரணத்தை பெற்றுவிட்டு பேசாமல் இருந்துவிட்டனர்.

இதன் காரணமாக பல கிராமசேவகர் பிரிவுகளில் நிவாரண பெர்மிட்டுகள் உரிமை கோராமல் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (86)

---

## இராசி பலன்

செவ்வாய்க்கிழமை
06-11-1990

சதுர்த்தி மு. இ. 7-11வரை மிருகசீரிடம் பி. ப. 5 04வரை சித்தயோகம், கரிநாள், இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை. நல்ல நேரம் 10-35 முதல் 12-05 வரை.

மேடம்: தொழில் பாராட்டு. சிக்கனம், மன நிறைவு, குடும்பசுகம்.

இடபம்: குடும்ப முரண்பாடு, இனசனப்பகை, அலைச்சல், அகால போசனம்.

மிதுனம்: வேண்டியது கிட்டும், தொழில் லாபம், எதிர்பாராத உறவு. குடும்ப மகிழ்ச்சி.

கடகம்; கடன்பளு, குடும்பத்தில் கருத்து முரண்பாடு, சகோதரர் சினம், வீண் யோசனை.

சிங்கம்: தாய்வழி உறவு, பெண் நட்பு, குடும்பத்தில் சுபகாரியம், தொழில்முயற்சி.

கன்னி; பதவிமாற்றம், மனக்குளப்பம், கருமங்கள் தடைப்படல், வீண்வம்பு.

துலாம்: தொழில் நஷ்டம், குடும்பகவலை, பயணங்களால் தொல்லை, தாய்நலம்பாதிப்பு.

விருச்சிகம்: வயிற்றில் ரோகம், அதிகாரிகள்தொல்லை மனக்குறை, குடும்ப மனஸ்தாபம்.

தனுசு: திருமண யோகம், குடும்பபாசம், தொழில் விருத்தி, நண்பருதவி.

மகரம்: செய்தொழில் லாபம், புதியஉறவு, தொழிலாளர் நன்மை, குடும்ப உற்சாகம்.

கும்பம்: கண்ணியக்குறைவு, அவப்பெயர், பெரியோர் பகை, தொழில்முடக்கம்.

மீனம்: செய்நன்றி மறத்தல், பொதுச்சேவை, பண மூலமான கவலை, புத்திரர் தொல்லை.

ஜோஸ்யர்.

---

## திருடர் கோஷ்டி சிக்கியது

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை, பன்னாலையில் உள்ள சேர். கனகசபை வித்தியாலயத்திலிருந்து இருமூடை சீனி, இருமூடை மா, ஒரு மூடை பருப்பு ஆகிய நிவாரணப் பொருட்களைத் திருடர் கோஷ்டி ஒன்று சைக்கிளில் ஏற்றிக்கொண்டு செல்லும் போது இப்பகுதி மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

இத்திருடர் கோஷ்டி சைக்கிளை போட்டுவிட்டு ஓடும் போது மக்கள் திருடர்களைக் கலைத்துப்பிடித்ததுடன் களவு போன பொருட்களையும் மீட்டனர்.

---


## ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

### பெற்றோரின் கவனத்திற்கு

1ம் ஆண்டு தொடக்கம் 13ம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள், பல இடையூறுகள் மத்தியிலும். மிகவும் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளிலும், மதிப்பீட்டுப் பரீசைகளிலும் பங்குபற்றுதவர்கள் கல்வியாண்டு இறுதியில் வகுப்பேற்றத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

RECTOR,

(எ-854)


---

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
01-05-1932

மறைவு:
09-11-1987

திதி:
06-11-1990



அமரர்
**தம்பாபிள்ளை, சோமசுந்தரம்**

மூன்றாண்டுகள் சென்றும் இன்றும் நீங்கவில்லை எம் துயரலைகள், ஆவி விடுத்துப்போன பின்பும் நாம் ஆயிரமாய்க் கலங்குகின்றோம். எம்குடும்பத்தின் ஒளி நீங்கள் வழிகாட்டுங்கள்.

அன்பு மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(எ-4122)

# ஈராக் மீது எவ்வேளையிலும் யுத்தப் பிரகடனம்:

# அமெரிக்கா பூர்வாங்க ஏற்பாடுகளுடன் தயார்!

## அரபு நாடுகளும் படையுடன் விரைவு

(வாஷிங்டன்)

ஈராக்கின் ஆக்கிரமிப்பிலிருந்து குவைத்தை விடுவிக்க அமெரிக்க படைகள் எவ்வேளையிலும் ஈராக் மீது யுத்தம் தொடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. யுத்தத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

இதன் ஒருகட்டமாக அமெரிக்க அதிபரின் விசேட தூதர் திரு. ஜேம்ஸ் பேக்கர் ஏழு அரபு நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அவசர பயணத்தை மேற்கொண்டுவருகிறார். ஈராக் மீது தாக்குதல் நடாத்த மேற்படி நாடுகளிடம் இவர் முழு ஆதரவையும் கோருவார்.

இதேவேளை திரு. ஜேம்ஸ் பேக்கர் நேற்று முன்தினம் வளைகுடாவில் நிலைகொண்டுள்ள சுமார் 3 லட்சம் அமெரிக்க படையினரை சந்தித்து யுத்தம் ஒன்றை எதிர்கொள்ள தயாராகுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் படைகளும் முழுதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஈராக் மீது யுத்தம் ஒன்றை தொடுக்க ஐ. நா. பாதுகாப்புசபை அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும் அமெரிக்கா கோரியுள்ளது. இதற்கிடையில் பல அரபுநாடுகளின் படைகளும் ஈராக்கிற்கு எதிராக போர் தொடுக்க தமது படைகளை வளைகுடாவிற்கு அனுப்பிவருகின்றன. (சி)

## அமெரிக்காவின் மிரட்டலை ஈராக் சமாளிக்கும்

(பாக்தாத்)

குவைத் ஈராக்குடன் இணைந்த ஒருமாநிலம். இதனை பிரிக்க எந்தவொரு நிலையிலும் ஈராக் அனுமதிக்காது. அமெரிக்காவின் எந்த மிரட்டல்களையும் சமாளிக்க ஈராக் தயாராகவே உள்ளது.

இவ்வாறு ஈராக் தெரிவித்துள்ளது. ஈராக் மீது யுத்தம் ஒன்றை தொடுக்க அமெரிக்கா ஆயத்தமாகிவருவது தொர்டபாக ஈராக் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே மேற்படி குறிப்பிட்டுள்ளது.

குவைத்தைகாரணம் காட்டி எந்தவொரு நாடும் வளைகுடாவை ஆக்கிரமிப்பதை ஈராக் அனுமதியாது யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் அதன் முழு விளைவுகளுக்கும் அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஈராக் எச்சரித்துள்ளது. (சி)

## நாளை நம்பிக்கை வாக்கெடுப்பு:

# ராஜீவ் ஆதரவைப் பெற தேவிலால் கோஷ்டி முயற்சி

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்றத்தில் பிரதமர் திரு. வி. பி. சிங் நம்பிக்கை வாக்கெடுப்பு கோரமுன் அவரை பதவியிலிருந்து விலக்கி இந்திரா காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சியை அமைக்க தேவிலால் கோஷ்டி கடுமையாக முயன்று வருகிறது.

தற்போதைய நிலையை சாதகமாக்கி ஜனதாதள்ளிலும். தேசிய முன்னணியிலும்பெரும் பிளவை ஏற்படுத்தி தமக்கு சாதகமாக்க திரு. தேவிலாலும், திரு. சந்திரசேகரும் கட்சிக்குள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு ஆதவாக திரு. சிங் அமைச்சரவையிலிருந்து பல அமைச்சர்கள் பதவி விலகியுள்ளதும், பிரதமரை உடனடியாக பதவி விலகுமாறு அவர்கள் கோருவதும் அதிகரித்துள்ளது. திரு. தேவிலால் திரு. சந்திரசேகர் குழுவினர் தமக்கு ஆதரவுகோரி இந்திரா காங்கிரசை சந்தித்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன

திரு. வி.பி. சிங் பதவிவிலகி புதியவர் ஒருவர் பிரதமராகும் பட்சத்தில் இந்திரா காங்கிரஸ் அவரை ஆதரிக்குமென ஏற்கனவே திரு. ராஜீவ்காந்தி அறிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

# சிங் இல்லாவிடில் ஆதரவில்லை

(புதுடில்லி)

பிரதமர்பதவியிலிருந்துதிரு. வி. பி. சிங் ராஜினுமா செய்தாலோ அல்லது அவரைகட்சி நீக்கினுலோ தமது முழு ஆதரவையும் உடனடியாக நீக்கப்போவதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளன.

திரு. வி. பி. சிங் இல்லாத அமைச்சரவைக்கு கம்யூனிஸ் கட்சிகள்ஒருபோதும் ஆதரவை வழங்கமாட்டா திரு. தேவிலால் கோஷ்டியினர் மேற்கொள்ளும் நடவடிக்கையால் நாட்டின் மதசார்பின்மை கொள்கைக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கட்சி தெரிவித்துள்ளது.

திரு. வி. பி. சிங்கிற்கு தொடர்ந்து ஆதரவளிக்குமாறு தேசிய முன்னணி கூட்டணியையும் கம்யூனிஸ் கட்சியினர் கேட்டுள்ளனர். (சி

## “திருமலையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம்”

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் 1948ம் ஆண்டு முதல் இன்றுவரை திருமலையில் நடந்த திட்டமிட்டசிங்களகுடியேற்றமும் அதன்பின்னணியும்பற்றியபல்வேறு தகவல்களையும் ஆதாரங்களையும் உள்ளடக்கி ‘ஈழநாடு’ அலுவலக நிருபர் திரு. மா. துரைநாயகம் நாளை 7-11-90 புதன்கிழமை முதல் ஈழநாடு இதழில் தொடர்ச்சியாக எழுதவிருக்கின்றார்.

## வெளிக்கள ஊழியர்க்கு கொடுப்பனவுகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி மாவட்டச் சுகாதார சேவைப்பகுதியில் கடமையாற்றும் வெளிக்கள ஊழியர்களின் பிரயாணப் படிகள் மற்றும் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படாமலிருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்படி வெளிக்கள ஊழியர்களில் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் மற்றும் ஒரு வருட ஒப்பந்தத்தில் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்ட இளைப்பாறிய பொது சுகாதாரப் பரிசோதகர்களும் அடங்குவர்.

கடந்த மே மாதத்திற்குப் பிற்பாடு சுகாதார வெளிக்கள ஊழியர்களுக்கு கொடுப்பனவுகள் எதுவும் வழங்க நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (153

# எதிர்க்கட்சியில் அமர தயார்

(புதுடில்லி)

பாராளுமன்றில் நாளை நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி ஏற்படும் பட்சத்தில் எதிர்க்கட்சியில் அமருவேன். பாராளுமன்றத்தை கலைக்க ஒரு போதும் சிபார்சு செய்யமாட்டேன்.

இவ்வாறு பிரதமர் திரு. வி. பி.சிங் தெரிவித்துள்ளார் ஜனதாதள் உறுப்பினர்களில் ஒரு சிலரே என்னை பதவியிலிருந்து இறக்க பலத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறுகள் கட்சி முழுவதும் அவ்வாறு தீர்மானித்தால் நான் அதற்கு கட்டுப்படுவேன்.

ஒரு சிலரின் சுயநல நோக்கிற்காக நாட்டை அழிவிற்குட்படுத்த ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன். தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. என்றும் திரு. சிங் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் திரு. சிங் ஜனுதிபதி திரு. வெங்கட்ராமனுடன் நேற்று முன்தினம் சுமார் 20 நிமிடம் முக்கிய பேச்சுக்களை நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதற்கு பலத்த கண்டனம்

(கொழும்புத்துறை)

‘‘சிங்கள பௌத்த அரசாங்கம் திட்டமிட்டு இந்து ஆலயங்களை விமானக்குண்டு வீச்சுமூலம் தரைமட்டமாக்கியும், சேதப்படுத்தியும் வருவதற்கு எமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிருேம். என்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் துணைச் செயலாளர் திரு. சி. வரதராசா கண்டனம் தெரிவித்துள்ளார்.

‘‘மட்டக்களப்பில் பல இந்துக்கோவில்கள் சேதமடைந்துள்ளன. தண்ணீர் ஊற்றுப் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலினுல் தண்ணீர் ஊற்றுப் பிள்ளையார் கோவில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் உட்பட ஏழு இந்துக் கோவில்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனின்போது சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டமனுறு செல்வசந்நிதி முருகன் ஆலய புதிய சித்திரத்தேர் இலங்கை இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

இதேபோன்று அண்மைக் காலத்திலும் பரவலாக அற்புதங்கள் நிறைந்த அநேக ஆலயங்கள் இலங்கைஇராணுவத்தினரின் வானத்தாக்குதல்களால் சேதமடைந்துள்ளன.

ஒவ்வொரு இந்துமத ஸ்தாபனங்களும், ஆலய முகாமையாளர்களும் தத்தமது பகுதி இந்து ஆலய சேதவிபரங்களை இந்து கலாசார அமைச்சர் திரு. பி. பி. தேவராஜாவுக்கு எழுத்துமூலம் அறிவிக்கும்படி அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## தொழிலதிபருக்கு கலாநிதிப் பட்டம்

(கொழும்புத்துறை)

மில்க்வைற் தொழில் அதிபர் க. கனகராசாவுக்கு இலங்கை சர்வதேச அக்கு பங்சர் இயற்கை மருத்துவ நிபுணர்கள் கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளார்கள்.

சித்த ஆயுள்வேத துறையை ஊக்குவித்து வருவதனையும், பொதுப்பணியையும் பாராட்டியே இவருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது. (து)

## புதிய உதவி அரச அதிபர்

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காணிப்பகுதி உதவி அரச அதிபராக பணியாற்றிய திரு. வி. எஸ். கனகரத்தினம் பூநகரி உதவி அரசாங்க அதிபராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவர் இம்மாதம் முதலாம் திகதி முதல் தமது அலுவலக கடமைகளைப் பொறுப்பேற்று உள்ளார்.

# பாகிஸ்தான் நிரூபித்தாலே அமெரிக்கா உதவும்

(கராச்சி)

பாகிஸ்தான் அணுவாயுத தயாரிப்பில் ஈடுபடவில்லை என தக்கசான்றுகளுடன் நிரூபிக்கும் பட்சத்தில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கவிருக்கும் ஐம்பத்தாறு கோடி டாலர் உதவியை வழங்கவுள்ளதாக அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புதியஅரசாங்கம் இதற்கான உத்தரவாதத்தை அமெரிக்க ஜனுதிபதி புஷ்ஷுக்கு வழங்குமென அவர்தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவிற்கு மிடையில் பெரும் கருத்து மோதல்கள் எழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## 16ம் நூற்றுண்டு ஓவியங்கள் கண்டுபிடிப்பு

(சென்னை)

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் பதினுரும் நூற்றுண்டைச் சேர்ந்த விஜயநகர அரசர் காலத்தைச் சேர்ந்த சிறப்பு ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி ஆலயத்தில் பழைய கால ஓவியங்களை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்ற வேளையில் மேற்படி ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (101)

## வீரமரணம்

(மன்னுர்)

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மாங்குளத்தில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகளின் 2-வது லெப்ரினன் மறவன் (சிங்கராஜா சிறீகாந்தா ரூபன், முல்லைத்தீவு) வீரமரணமடைந்தார். (வி)

## பல்கலைக்கழக தெரிவுப் புள்ளி

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியக்குழு அடுத்த கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடும்பதற்கான கொழும்பு மாவட்ட புள்ளிகளை அறிவித்துள்ளது.

மருத்துவம் - 288. பொறியியல்-275, விஞ்ஞானம்-256. வெளிமாவட்ட புள்ளிகள் விரைவில் வெளியாகுமென அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. (ச)

# ஒவ்வொருவாரமும்கண்டியில் 50 பேர் கடத்தப்படுகிறார்கள்

(கண்டி)

இலங்கையின் மத்திய மாகாணமான கண்டிப்பகுதியில் ஒவ்வொரு வாரமும் 20 தொடக்கம் 50 பேர் வரை திடீரென காணாமல்போய் விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

அரசியல் காரணங்களுக்காகவே இந்தக் கடத்தல்கள் நடைபெற்றுவருகின்றன.

கடத்தப்படுபவர்கள் பற்றிய தகவல் எதனையும் பெற முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை இங்குள்ள பலர்கொலை மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில்நுட்பக் கல்லூரியை மீள ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் இம்மாதம் 12ந் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரியில் பயிலும் வணிகம், பொறியியல், தொழில்துறை சார்ந்த பகுதி, மாலை நேர மாணவர்கள் அனைவரையும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கல்லூரி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (153)

## தென்பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற் போனவர்கள் நண்பர்கள் இயக்கம் இந்தக் குழுவினரின் விஜயத்திற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தது.

கொலைகள், ஆட்கள் காணாமற்போவது தென்னிலங்கையில் இன்னமும்நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆட்கள் காணாமல் போதல் கொலைகள் எவற்றுக்கும் தாங்கள் காரணமல்ல என்று பொலிஸாரும் இராணுவத்தினரும் தெரிவித்துள்ள போதிலும் சீருடை அணியாமல் இந்தச் சம்பவங்களில் படையினர் ஈடுபட்டிருக்கலாம் என்றும் மேற்படி குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# விமானத் தாக்குதலினால் முல்லையில் மின்தடை

(மாங்குளம்)

மாங்குளத்தில் இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற விமானத் தாக்குதலில் முல்லைத்தீவுக்கு மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் இருந்து நீர் மின்சாரம் வழங்கும் 132 கே. வி. 33 கே. வி. கேபிள்கள் சேதமானதால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகியஇடங்களுக்கான நீர் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன. (150)

# உதவிப் பணம் பெறுவோர் பிரிவு உ. அ. அதிபருடன் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவை அமைச்சினால் வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணத்தை பெறும் யாழ். மாவட்டத்திலுள்ள காசநோய், புற்றுநோய், தொழுநோய், ஆகிய வற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் பகுதிகளைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு யாழ்,மாவட்ட உதவி சமூக சேவைப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் இவர்களுக்கு ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய மாதாந்த உதவிப் பணம் பணமாக வழங்கப்படவுள்ளது.

இதற்காக யாழ், சமூக சேவைப்பகுதியினால் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களுக்கு 2 லட்சத்து 69 ஆயிரம் ரூபா பணம் நேற்று வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (153)

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரம்பிள்ளை யோகேஸ்வரி

(வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி)

திருமதி ஈ: யோகேஸ்வரி 3-11-90-ல் இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் ஈஸ்வரம்பிள்ளையின் (மேற்பார்வையாளர் மலேரியா தடுப்புப்பகுதி முல்லைத்தீவு) அன்பு மனைவியும், யசோதை (யூனியன் கல்லூரி), பிரகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற மார்க்கண்டு குலக்கண்டுவின் அன்பு மகளும், காலம்சென்ற கருணாக்கிளி,சோமேஸ்வரானந்தம் (K. C. W.), தங்கேஸ்வரானந்தம் (L. C. L), சுகுனேஸ்வரி. நகுலேஸ்வரி, பிறேமானந்தம் (பிரபா சுவீடன்), காலம்சென்ற விஜியானந்தம் (அருண்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், இரத்தினராசா (பிரபல வர்த்தகர் கொழும்பு), துரைசிங்கம் (முல்லைத்தீவு), குணரட்ணம் வல்லிபுரம் (பொலிஸ் சார்ஜன்ட்), செல்வச்சண்முகநாதன் (சவுதி), சாம்பசிவம் உருத்திராபதி, மதுரம் சீதாலட்சுமி, சாவித்திரி ஆகியோரின் மச்சாளும், பிறேமராஜ் (சுவீஸ்), விஜிதராஜ், செந்தில்ராஜ் (கனடா), விமலனும் சகோதரர்களும், பரமேஸ்வரன் (பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொழும்பு), குலராஜாசிங்கம். சசிலா ஆகியோரின் சிறியதாயாரும், ஜானகி, வைதேகி, கிரிசாந்தி (சுவீஸ்), சஜனி. பரமேஸ்வரன் (சுவீஸ்), ரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 4-11-90-ல் மட்டுவில் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. ஈஸ்வரம்பிள்ளை.
வைத்தியசாலை வீதி, மட்டுவில் வடக்கு.
மட்டுவில்.

(ஏ 853)

## ஜனதாதள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உறுப்பினர் கூட்டத்தில் திரு. சந்திரசேகர் ஜனதாதள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், வி. வி. சிங்கின் தலைமைத்துவத்தை நீக்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் வி.பி. சிங்கின் அமைச்சரவையிலிருந்து ராஜினமாச் செய்த அமைச்சர்கள் உட்பட 24 லோக் சபா உறுப்பினர்களும், 5 ராஜ்யசபா உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

இதேசமயம் மேலும் இரு அமைச்சர்கள் பிரதமர் வி. பி. சிங்கின் அமைச்சரவையிலிருந்து பதவியை ராஜினமாச் செய்துள்ளனர்.

இதேசமயம் தேவிலால் இல்லத்தில் கூட்டம் நடத்திய ஜனதாதள் உறுப்பினர்கள் சகலரையும் கட்சியிலிருந்து பிரதமர் வி: பி. சிங் நீக்கியுள்ளார்.

அரசியலில் ஏற்பட்ட புதிய திருப்பம் காரணமாக நேற்று நடைபெறவிருந்த இந்திரா காங்கிரஸ் கூட்டம் இன்று மாலைவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஜனதாதள் தலைவர் எஸ். ஆர். பொம்மை நேற்றுமாலை ஜனாதிபதி வெங்கட்ராமனை சந்தித்து இன்றைய அரசியல் நிலைமைபற்றி விளக்கி கூறினார். (மா)

## மாவீரர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

வனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

நாயன்மார்க்கட்டுப் பகுதிக்கான மரம் நடுகைக்குழு ஒன்றும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. (123)

## சிங்கள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லினால் 200க்கு மேற்பட்ட வீடுகள் மாவிட்டபுரம் பகுதியில் சேதம் அடைந்துள்ளன.

கடந்த 3ம் திகதி இரவு, மாவிட்டபுரம் மினி முகாம் தாக்கப்பட்டசமயம் மாவிட்டபுரத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடைப்பட்ட பகுதியை நோக்கி சிங்கள இராணுவத்தினர் சரமாரியான ஷெல் பிரயோகத்தை மேற்கொண்டனர்,

நேற்றுக் காலை இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பலரும் தமது வீடுகளைப் பார்த்துவரச் சென்றனர்.

அச்சமயம் 200க்கும் மேற்பட்ட வீடுகள் கூரைகள், சுவர்கள் உடைந்து சேதமடைந்திருப்பதாகத்தெரிவித்தனர். (86)

## நீண்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவர்கள் நேற்றுக்காலை தங்களை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டார்கள்.

பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் பலரும் சமூகமளித்திருந்த போதும் விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.

புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் சிநேகபூர்வமாக வரவேற்றார்கள். புதிய மாணவர்கள் துன்புறுத்தல் மற்றும்அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தல் ஆகியவை இந்தமுறை இடம்பெறவில்லை.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் வருகை மிகவும் குறைவாக காணப்பட்டது. (153]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி: 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## மன்னாரில்

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் மத்தியிலும் விடுதலைப் புலிகளின் தெருக்கூத்து நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

மடு,- பெரிய பண்டிவிரிச்சான், உயிலங்குளம், நானாட்டான் உட்படப் பல பகுதிகளிலும் ''நாங்களும் புலிகளே'' என்னும் தெருக்கூத்து நடைபெற்றுவருகிறது.

## தெருக்கூத்து

இத்தெருக்கூத்தை தினமும் பெருந்திரளான பொதுமக்கள் கண்டு களிப்பதாகவும் கூறப்படுகிறது. (வி)

## வவுச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்க, உள்ளூராட்சி அமைச்சினால் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளைக்கு அனுப்பப்பட்ட மொத்தக் கொடுப்பனவுக் காசோலையின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைந்துள்ளதால் வங்கிகள் இவற்றுக்கான பணத்தை மேற்படி வங்கி வழங்க மறுத்துள்ளது.

இக்காசோலைக்கான புதிய திகதியை மாற்றித் தரும்படி வங்கி அதிகாரிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டின் உதவியை நாடியுள்ளனர். (ச)

## புலிகளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு மணலாறு பகுதியில் தகனம் செய்யப்பட்டது.

மேற்படி வைபவத்தில் பெருந்திரளான மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டனர். (வி)

## திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளதாகவும், விடுதலைப்புலிகள் தரப்பில் மூவர் வீரமரணமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

மேற்படி முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் பெரியகுளம் பகுதியில் உள்ள நெடுங்கேணி காட்டுப்பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்த முற்பட்டபோது விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இராணுவத்தரப்பில் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலால் பின்வாங்கிய இராணுவம் முகாமுக்குள் செல்லும் போது மிதிவெடிகளில் சிக்கியும் பலர் கால்களை இழந்ததாகவும் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் லெப்ரினன் கனகு இலட்சுமணன், கணேஷ் ஆகியோர் வீரமரணமடைந்தனர். (வி)

# விவசாய பீடாதிபதியின் அலுவலகம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடாதிபதி அலுவலகம் நேற்று முதல் கிளிநொச்சியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்த அலுவலகம் இரணைமடு சந்தியிலுள்ள கிளிநொச்சி விவசாயப் பயிற்சி நிலையத்தில் இயங்கிவருகிறது.

விவசாயபீட விரிவுரைகள் அடுத்த மாதம் 3ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த பிரிவில் கல்வி பயில 26 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட தற்காலிக விரிவுரையாளர்கள். உதவிரிவுரையாளர்கள் செய்முறை காட்டுநர்களும் இம் மாதம் 14 ந் திகதி கிளிநொச்சியில் தங்கள் பதவிகளை பொறுப்பு ஏற்பார்கள் என்று தெரியவருகிறது. (153)

## வவுனியா பாடசாலைகளில் அகதிகள்

(மாங்குளம்)

வவுனியா மகாவித்தியாலயத்திலும், சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் இன்னமும் அகதிகள் இருந்துவருகின்றனர்,

மேற்படி இரு பாடசாலைகளும் தற்காலிகமாகக் கொன்வென்டில் நடைபெற்றுவருகின்றன.

வவுனியாவில் திடீர்திடீரெனப் பதற்றநிலை ஏற்படுவதால் வரவு குறைந்துள்ளது. (150)

## 4ம் கட்ட உணவு விநியோக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கான 4ம் கட்ட இலவச உணவுப் பொருள் விநியோகம் மற்றும் தொழில் இழந்தோருக்கான 3ம் கட்ட நிவாரணம் ஆகியவை சம்பந்தமாக நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இன்னும் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

மேற்படி திகதி நிர்ணயம் சம்பந்தமாக நாளைக் காலை யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் கூட்டம் நடைபெறவிருக்கிறது. (153)

## வலி. வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், வீமன்காமம், மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய பகுதிகளில் பொம்மர்கள் குண்டுகளை வீசின.

இக்குண்டு வீச்சினால் தெல்லிப்பழையில் சில கட்டடங்கள் சேதமுற்றன. இந்தக் குண்டுகளில் சில, ஈரலிப்பான நிலங்களில் விழுந்ததால் அவை வெடிக்கவில்லை. (86)

விளம்பரம்

## விற்பனைக்கு

அதிக விளைச்சலுக்கு உதவிடும் நீமியா உரம் மில்க்வைற் தொழிலகத்தின் ஒரு சாதனை உற்பத்தி. கிலோ பைக்கற் ரூபா 5-00; மொத்தமாக வாங்குவோர்க்கு விசேட சகாய விலை: திருநெல்வேலியிலும், இணுவிலிலும் அண்ணா கோப்பிக் கடையில் விற்பனையாகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம்.